


229
2.55.
29
0-,4NGBZ,
N53,
11570

# கடிதம்

கி. ரா. கோபாலன்.

ரோகிணி பிரசுரம்
கும்பகோணம்.

முதற் பதிப்பு — பிப்ரவரி 1953.

எல்லா உரிமைகளும் ரோகிணி பிரசுரத்தாருக்கே.

O-,4NGB2,K
X53

சிவாஜி பத்திரிகையில்
இக்கடிதங்களைப் பிரசுரத்ததிற்காகவும், இதைப்புத்தகமாக
வெளியிட அனுமதித்ததற்காகவும்
ஆசிரியர் ஸ்ரீ திருலோகசீதாராம்
அவர்களுக்கு நன்றி.

TAMIL NADU ARCHIVES LIBRARY
EGMORE, MADRAS
111570

உள்நாடு விலை 8 அணா.
வெளிநாடு விலை 12 அணா.

தூய்மையானவை, தூய்மை அற்றவை என்பதாய் புத்தகங்கள் ஒன்றுமில்லை. ஒன்று, புத்தகங்கள் நன்ருய் எழுதப்பட்டிருக்கின்றன; அல்லது மோசமாய் எழுதப்பட்டிருக்கின்றன. அவ்வளவுதான்.

—ஆஸ்கார்-வொயில்டு.

There is no such thing as a moral or an immoral book. Books are well written or badly written. That is all.

—OSCAR-WILDE.

# 1

# நிர்மலா

மதுரை 5—9—48.

க்ஷேமம்,

அன்புள்ள கமலாவிற்கு

உனக்கு இத்தனை நாளாக நான் எழுதிக்கொண் டிருந்த கடிதங்களுக்கு நேர் மாருகத்தான் இக்கடிதம் இருக்கும். இதை எப்பொழுதோ உனக்கு நான் எழுத வேண்டியது. இத்தனை நாளாக மனதில் அடைந்து கிடந்ததை இன்று நான் உனக்கு எழுதத் துணிந்து விட்டேன். எல்லாவற்றையும் என்னல் எழுதாமலும் இருக்கமுடியவில்லை.

என்னைவிட வயதில் சிறியவள் தான் நீ. உன்னுடைய தகப்பனரின் வைதீக மனப்பான்மை உன்னை இச்சிறு வய திலேயே ஒரு குழந்தைக்குத் தாயாக்கிவிட்டது. இதெல் லாம் விதியல்ல; மனிதர்களின் மனேதர்மத்தைப் பொறுத் தது. மனேதர்மத்தோடு ஒட்டிவிடுகிறது வாழ்க்கை.

பத்துவயதிலேயே-நீ என்னோடு தெருவில் விளையாடுக் கொண்டிருக்கும் போதே, உன்னை இழுத்துக்கொண்டு போய் மணப்பந்தலில் உட்காரவைத்து விட்டார்கள். எனக்குக்கூட அப்பொழுது உன்னைப்போல் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. காரணம்-கல்யாணம் என்பது அப்பொழுது என்னுடைய சிறிய மூளைக்கு அவ்வளவு சுலபமாகப்பட்டது. நம்முடைய மரப்பாச்சிக் கல்யாணத்தின் சம்பிரமம் தான் வாழ்க்கை மணத்திலுமிருப்பதாக எனக்குத் தோன்றியது. குழந்தைப் பருவத்தைப் போலவே நாமும் வளராமல் அப்படியே இருந்தால் வாழ்க்கையில் எல்லாம் எளிதாகவே இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

உன்னைவிட நான் பெரியவள் தானே! எனக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை, காலேஜ் படிப்பும் ஓயவில்லை. இதற்குக்காரணம் வாழ்க்கையை கட்டுப்பாட்டிற்கும் மன அபிப்பிராயத்திற்கும் ஒத்த முறையில் நடத்தவேண்டியிருப்பது தான். மனித ஸமூகத்தின் நியதியின் பெயரால் கற்பிக்கப்பட்ட இந்தக் கட்டுப்பாடு மனோபீஷ்டத்தை தன் காலின் கீழ் கிடத்தி கோர தாண்டவம் புரிகிறது. உன்னைப்போல் நானும் கல்யாணம் செய்துகொண்டிருந்தால், உன்னைவிட வயதில் மூத்தவளான எனக்கு இப்பொழுது இரண்டு குழந்தைகள் பிறந்திருக்கலாம். அப்படி இல்லாவிட்டாலும், வேறு ஏதாவதொரு பந்தம் என்னைச் சுற்றிக் கொண்டு நிற்கும். இவைகளெல்லாவற்றிலிருந்தும் விலகி

இன்று நான் தனியாக — கன்னியாகவே உலகில் உலவி வருவதற்குக் காரணம் மன எழுச்சியை மிதித்து நிற்கும் கட்டுப்பாடோ மனோதர்மமோதான்.

சீர்திருத்த வாதிகள் பெண்களைப்பற்றி நிறையப் பேசக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். பெண்களுக்கு நன்மை செய்வதாகச் சொல்லி எதை எதையோ நடைமுறையில் கொண்டுவரவும் பார்க்கிறார்கள். ஆனால், பாவம்! அவர்களில் ஒருவருக்காவது பெண்ணின் ஹிருதயமே தெரியவில்லை. அவர்களுடைய சீர்திருத்தம் தீவிரமாகப் போவதினால் ஏற்படும் இடையூறுகளும் அவர்கள் கண்களில் படுவதில்லை. என்னுடைய அபிப்ராயம் பழைய—புராதன கட்டை வண்டியில் நாம் ஏறிக்கொண்டு போவதும் தவறு; புதிய நவீன மோட்டாரில் ஏறிக்கொண்டு இடையே இருப்பவைகளை கவனியாமல் காற்றிலும் கடிதாகச் செல்வதும் தவறு. என்னுடைய தகப்பனார் செய்ததும் தவறு; உன்னுடைய தகப்பனார் செய்ததும் தவறு. உன்னுடைய தகப்பனாரின் கொள்கை கால ஓட்டத்தில் மறைந்துகொண்டு வருகிறது. ஆனால் இப்பொழுது, ஒரு அபாயம். என்னுடைய தகப்பனாரின் தீவிர சீர்திருத்தக் கொள்கை அறிந்தோ—அறியாமலோ அதிகமாகவும், அனாவசியமாகவும் பரவிக்கொண்டு வருகிறது. உன்னுடைய தகப்பனாரின் கொள்கைகள் அடியோடு மறைந்து விடுவதும் தவறு. என்னுடைய தகப்பனாரின் சீர்திருத்தக் கொள்கை கண்மூடித்தனமாக வளர்ந்துகொண்டு வருவதும் பிசகு என்று

தான் படுகிறது. உலகம் தற்காலத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடிய கொள்கையாயினும், அது ஒரு அளவோடு இருப் பது தான் சரி. ரொம்பவும் தீவிரமாகப் போவதினால் மனித ஸமூகத்திற்கு இன்னலும் இழுக்குத்தான் ஏற்படும் என்பது என் அபிப்பிராயம்.

எனக்குப் படிப்பில் இருக்கும் ஆவல் இப்பொழுது மறைந்து கொண்டே வருகிறது. ஆண்கள் ஐம்பது வயது வரையில் படிக்கட்டும். பெண்கள் இருபது வயது வரை யில் தான் படிக்கமுடியும். ஆண்களைவிட பெண்களைத் தான் இயற்கை, பருவம், அனுபவம், இவைகள் விரை வாகத் தீண்டுகின்றன என்பது என் அபிப்ராயம். கட்டுப் பாடும், கொள்கையும் ஒரு விதத்தில் அடக்கிவைத்தால் கூட உணர்ச்சி அவைகளை மீறிப் போராட யத்தினிக் கிறது.

என் தகப்பனருக்கு என் விவாக விஷயத்தைப்பற்றி கவலையில்லை. என் தாயார் இருந்தால் நான் இப்பொழுது எப்படி இருப்பேனே ? "தாய்" என்று ஒருத்தி இல்லாத குடும்பம் குடும்பமே இல்லை. அதுவும் என் தகப்பனரைப் போன்ற சீர்திருத்த வாதி கையில் ஒரு பெண்ணை ஒப் படைத்துச் சென்றால்........? அவருக்குத் தெருவாசல் மெழுகிக் கோலமிடப்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றி கவலையே இல்லை.

நான் பெண்களின் இயற்கையிலிருந்து துளிக்கூட தவறி நடக்கவில்லை. தவறி நடக்கவேண்டு மென்றால்

கூட கட்டுப்பாட்டையும், கடமையையும் மீற எனக்குத் துணிவில்லை. நான் தவறி நடந்தாலும் என் தகப்பனர் கவலைப்படமாட்டார். நான் எந்த ஆண்பிள்ளையோடு எங்கே எப்படிப் பழகினலும் என் தகப்பனர் அதைப்பற்றி அக்கரை செலுத்தமாட்டார். ஏனென்ருல் அவர்கள் கண்களைச் சீர்த்திருத்தக் கண்ணுடியல்லவா மறைத் திருக்கிறது ?

நான் உன்னிடம் முக்யமாகச் சொல்லவேண்டியது என் கல்யாண விஷயம். அந்தப் பொறுப்பு முழுவதையும் என்னிடமே விட்டுவிட்டார் என் தகப்பனர். நான் படித் தவள்; அறிவாளி. நான் எண்ணுவதிலும், நடப்பதிலும் குறையே இருக்காது என்பது அவருடைய் அபிப்ராயம். நான் குமரனையோ கிழவனையோ அல்லது பிராமணரையோ, கிருஸ்துவரையோ மணந்துகொள்ளலாம். அதனல் என் னுடைய தகப்பனரின் திருப்திக்கு பங்கமேற்படாது.

இதற்கிடையே இன்னமொரு வார்த்தை. காதல் இந்த வார்த்தையின் உயரத்தை, அகலத்தை, அழகை, குணத்தை இவைகளையெல்லாம் வர்ணிக்கும் சகாப்தம் இன்னும் முடிவுறவில்லை. இது இன்று புதிதாக ஏற்பட்ட வார்த்தையல்ல. புராதனகாலத்திலிருந்தே கலை, இலக் கியம், வாழ்க்கைப் பண்பாடு எல்லவற்றையும் வளர்த்து கொண்டு வந்திருப்பதாகத் தெரிகிறது. நீ புஸ்தகங்கள் படித்திருக்கவேண்டாம்—தவறிப்போய் ஒரு சினிமாவாவது

பார்த்திருப்பாய் என்று நினைக்கிறேன். நமது தர்மங்களை குலைக்கக்கூடிய சில சீர்திருத்தவாதிகளின் பிரசார சாதனமாகிவிட்டது சினிமா. இது ஆண்களைவிட நம் போன்ற பெண்களின் நல்லொழுக்கங்களை சீர்குலைத்து விடும்போலிருக்கிறது. விவாகமான உனக்கு இந்த காதல் விஷயம் கொஞ்சம் தெரிந்திருக்கலாம். இவ்விஷயத்தில் உன்னுடைய சொந்த அனுபவம் ஏதாவது இருந்தாலும் எழுது. எனக்கு அனுபவமில்லை.

என் உள்ளத்தின் நிலையை உனக்குச்சொல்லுகிறேன். என்னை இவ்வைந்து வருஷமாக ஏதோவொரு உணர்ச்சி ஆட்கொண்டு உந்துகிறது. ஆனல் அது காதலில்லை என்பதையும் அனுபவபூர்வமாக உணர்ந்துவிட்டேன். ஏனென்ருல் என் உணர்ச்சியில் ஐக்யமாகக்கூடிய உருவமே ஸ்திரமில்லாமல் இருக்கிறது. உன்னிடம் சொல்ல எனக்கு என்ன வெட்கம்? என் மனதில் ஏற்பட்டுளள உணர்ச்சி குடிகாரனின் விருப்பம் போன்றது. போதைக்காக ஒரு வஸ்து வேண்டும் அது கள்ளோ—சாராயமோ கஞ்சாவோ எதுவானுலும் சரியே. எனக்கு போதைதான் வேண்டும். நானும் யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். இந்த போதை காதலாக எப்படி இருக்கமுடியும்? போதையைப்போல் காதல் என்று சுலபமாகச் சொல்லிவிடலாம். ஆனல் அதன் தலையில் தெய்வீகத்தையும், ஒழுக்கத்தையும் தூக்கிவைப்பது மதுவை அமுதமென்று சொல்வது போலத் தானிருக்கும். நான் உணர்ச்சியைக் காதலென்று நினைத்ததுண்டு. அந்தக் காதல் கண்ணியை விசிறி விசிறி

ஏதாவதொரு பறவையைப் பிடிக்க எண்ணினேன். ஆனல் நான் எதிர்பாராத வண்ணமாக அனேக அழகான பறவைகள் அக்கண்ணியில் வந்து சிக்கி என் எண்ணத்தைச் சிதற வைத்தன. எந்தப் பறவையை என் காதலனுக—காதலுக்குகந்ததாகச் செய்து கொள்வது என்று எனக்கே தெரியவில்லே. போதையைவிரும்பும் குடிகாரன் எத்த பாட்டிலேத் திறந்து முதலில் குடிக்கலாம் என்று சிந்திப்பது போல.

கலாசாலேயில், வகுப்பில் எனக்கெதிரே உட்கார்ந்திருக்கும் ரகுநாதன் என்னேப் பார்த்து புன்முறுவல் பூத்தான். அப்பொழுது எனக்கேற்பட்ட உணர்ச்சியைக் காதலென்று நினேத்தேன். நானும் ஒரு கோணல் பார்வையை அவன் மீது வீசினேன். ஒருவருக்கும் தெரியாமல் என்மீது அவன் ஒரு கடிதத்தை விட்டெறிந்தான். அதை மெதுவாகப் படித்துப் பார்த்தேன்.

''நான் உன்னே காதலிக்கிறேன். உனக்கு எந்த விதத்திலும் கடமைப்பட்டிருக்கிறேன். உனக்காக உயிரைக் கூட விடத்தயார்'' என்று எழுதியிருந்தான். அதைப் பார்த்ததும் எனக்கொரு ஆனந்தம். வரண்ட பாலேவனத்தில் தாகத்திற்குத் தண்ணீர் அகப்பட்டதைப்போல. என்னுடைய அந்தரங்க சினேகிதி சுலோசனுவிடம் இதைச் சொல்லாமலிருக்க முடியவில்லே என்னல், அவளிடம் ரகசியமாக அக்கடிதத்தைக் காட்டினேன். ஆனல் நான் திடுக்கிடும்படி அவள் செய்துவிட்டாள். அவள் ஒரு துண்டுக்கடிதத்தை எடுத்து என்னிடம் காட்டினுள்.

"அன்புமிக்க சுலோசனு! நான் உன்னைக் காதலிக்கிறேன். நான் எந்த விதத்திலும் உனக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். உனக்காக உயிரைக் கூட விட்டுவிடுவேன்"— இப்படிக்கு உன் அன்புள்ள, ரகுநாதன்.

இதைப் படித்த பிறகு என் மூளை குழம்பாமல் என்ன செய்யும்? என் வகுப்பில் என்னைப்போல் என்னைவிட அழகான இன்னும் ஐந்து மாணவிகள் இருக்கின்றனர். ரகு பிராணத்தியாகம் செய்ய இன்னும் நான்கு உயிர்களை வைத்திருக்கிறுன் என்று நினைக்கிறேன். இம்மாதிரியே இருக்கிறுர்கள் மற்ற மாணவர்களும். அவர்கள் மீது மனந்துணிந்து என்னல் குற்றம் சொல்லமுடியாது. என்னுடைய உணர்ச்சியைவிட அவர்களுடைய உணர்ச்சி அவ்வளவு கடுமையானதல்ல. பெண்மையினுடைய அடக்கம் என்னுடைய மன எழுச்சியை மழுப்புகிறது. அவர்களுடைய அஞ்சாமை அவர்களது மனேநிலையை அம்பலப்படுத்துகிறது. இதுதான் என்னுடைய தீர்மானம்.

இந்த சம்பவத்தில் ஏற்பட்ட என்னுடைய அனுபவத்திலிருந்து காதலைப்பற்றி நானும் கொஞ்சம் தெரிந்துகொண்டுவிட்டதாக நினைக்கிறேன். உணர்ச்சி எந்த ஹிருதயத்திலும் எழலாம். ஆனல் அதை தலைதெரிக்க ஓடவிடக்கூடாது. அதை ஒரு கட்டுக்கடங்கினதாகச் செய்ய வேண்டும். எண்ணம் எழலாம்; ஆனல் அந்த எண்ணத்தின் வேகம் எங்கே பாய்கிறது. என்பதையும் உணர வேண்டும். உணர்ச்சிக்கு உயிர்கொடுக்கும் இடம் ஒன்று

உண்டு. ஒவ்வொரு இடத்தில் உணர்ச்சி எழுந்தவுடன் அதைக்கொன்று மனதிலேயே சமாதிவைக்கத் துணிவு வேண்டும். தன் மனைவிக்காகவோ — அல்லது தன்னை அண்டிநிற்கும் ஒரு பெண்ணிற்காகவோ—தன் கணவனுக் காகவோ—அல்லது தன்னை நம்பும் ஒரு மனிதருக்காகவோ தன் உணர்ச்சியைக் கட்டுப்படுத்துவது தான் பெண் ஆணிற்காகவும், ஆண் பெண்ணிற்காகவும் செய்யும் பெரும் கடமைகளில் ஒன்ருகும். இதைக் காதலென்று நான் சொல்லத் தயாராயில்லை. நியதி அல்லது கடமை யென்ற பதம் தான் பொருத்தமானது என்று எனக்குத் தோன்றுகிறது. இம்மாதிரியான கட்டுப்பாடான வாழ்க் கைத்தான் மனிதனின் உயர்வை எடுத்துக் காட்டுவதற்கு உகந்ததாயிருக்கும். இதைத்தான் நான் விரும்புகிறேன். என்னுடைய ஆர்வத்தை — எண்ணத்தின் இன்பப்பிரதி பலிப்பை ஹிருதயத்தின் ஆர்வதுடிப்பைத் செலுத்த — உணர்வையடக்கி உயிரைக்கையில் பிடித்துக்கொண்டு ஒரு ஜீவனை எதிர் நோக்குகிறேன்.

இன்னும் எவ்வளவோ உனக்கு எழுத வேண்டு மென்று ஆவல். உன்னைப்போன்ற பெண்ணுக்கு அவ் வளவையும் எழுதுவது குற்றமாகுமோ என்ற பயம்வேறு. உன் அன்பான கடிதத்தை எதிர்பார்க்கிறேன்.

அன்புள்ள,

நிர்மலா.

# 2

# கமலா.

விழுப்புரம் 8—9-48.

க்ஷேமம்,

அன்புள்ள நிர்மலாவுக்கு

உன் கடிதத்தைப் பார்த்தேன். உன்னைப்போல் அவ்வளவாக நான் படித்தவளல்ல. உன்னைப்போல் என்னால் ஆராய்ச்சி செய்யவும் முடியாது; நீண்ட கடிதம் எழுதவும் முடியாது.

உணர்ச்சி—காதல் என்று ஏதோ நிறைய எழுதியிருக்கிறாய். நீ சொல்லும் அளவிற்குப் புரிந்துகொள்ள எனக்குச் சக்தியில்லை. இது நான் படிக்காத தோஷமாக இருக்கலாம். அல்லது உன்னைப்போல் உலகத்தில் அனுபவப்படாத தோஷமாகவும் இருக்கலாம், ஏதோ கட்டுப்பாடு என்கிறாய். அது இன்னம் உன்னைத் தீண்டவில்லை என்பது தான் என் அபிப்ராயம். ஆனால் அது என்னை எப்பொழுதோ — என்னுடைய பத்தாவது வயதிலேயே

வந்து ஆட்கொண்டுவிட்டது. இன்னும் அது என்னை விடவில்லை. விடவும் விடாது. குடும்ப பாரம் தலையில் ஏறினல் உணர்ச்சி கொஞ்சம் கொஞ்சமாக மழுங்கி விடும். இது என்னுடைய அனுபவமும், அபிப்பிரா யமும். சிலர் குடும்ப நியதியிலிருந்து தவறி நடக்கவும் கூடும். அதற்கு இந்த உணர்ச்சியின் உத்வேகம் தான் காரணமாயிருக்கும். உணர்ச்சிக்கு அணைபோட வேண்டு மென்று நீ சொல்லுகிருய். இது சமுத்திரத்தில் அலை களுக்கு முன் மணலைக் குவிப்பதுபோல் தான் முடியும். நான் சொல்லுகிறேன்; அந்த உணர்ச்சி எழவே கூடா தென்று. அதற்கு உடலை மரமாகச் செய்துகொள்ளப் பழகவேண்டும். நீ சொல்லும் அந்த விஷய உணர்ச்சி இப்பொழுது என்னிடம் இல்லை. இப்பொழுது அது உன் னைத் தீவிரமாக வந்து பற்றியிருக்கிறது. நீ குடும்பச் சுழலில் சிக்கினல் — அனுபவமடைந்தால் ஒரு வேளை உன்னைவிட்டு அது மறைந்து விடலாம்.

எட்டு வருடங்களுக்கு முன்னல் நாங்களிருவரும் இருந்த நிலைவேறு; இன்று நானும், என் கணவரும் இருக்கும் நிலைவேறு. எட்டு வருடங்களுக்கு முன்னல் என் கணவர் பந்தாட்டத்திலும், பள்ளிக்கூடத்திலுமே கவலையுள்ளவராய் இருந்தார். என் தாயார் எனக்கு "அவ ரைக்காய் கறி செய்வதெப்படி, சுண்டவத்தல் குழம்பு வைப்பதெப்படி" என்பதைக் கற்றுக்கொடுத்துக் கொண் டிருந்தாள்.

இரண்டு வருடங்களுக்கு முன்னுல் என் கணவர் நான் வாசற்புறம் போனுல் வாசற்புறமும், கொல்லேப் புறம் போனுல் கொல்லேப்புறமும் என்னேச் சுற்றிச் சுற்றி வளேயவந்துகொண்டிருந்தார். காரியமில்லாமல் கதையளப் பார். ஐந்து மணிக்கு ஆபீஸ் கலேயும்; ஐந்தே கால் மணிக்கெல்லாம் அவரை வீட்டில் பார்க்கலாம். வீட் டைப்பற்றி, தாய் தகப்பனுரைப்பற்றி அவருக்குக் கவ லேயே இல்லே. என்? எனககும் அப்படித்தான். அடுப் பில் அரிசியைக் களேந்து வைத்துவிட்டு, கிணற்றங் கரையில் அவரோடு பேசிக்கொண்டே நிற்பேன். ஆபீஸ் நேரம் தவறுவது கூடத் தெரியாமல் என்னேடு அர்த்த மில்லாமல் ஏதாவது சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண்டு நிற்பார். ஆபீஸிலிருந்து வரும்போது சட்டைப் பையில் பூ, ரிப்பன், சோப்பு, பவுடர் ஏதாவது எனக்காக இருக்கும். இன்னும் சில ரகசியமான விஷயங்களேச் சொல்லி உன் னுடைய உணர்ச்சியை உத்வேகமுள்ளதாகச் செய்ய நான் விரும்பவில்லே. அதுவும் அனுபவமடையாத நீ இந்த எண்ணத்தைச் சமாளிப்பது கஷ்டம். என்னுடைய மனச்சுமையை சுமத்த ஒரு இடம் எனக்கிருந்தது; இருக்கிறது. ஆனுல் நீ இன்று உணர்ச்சியின் நினேவு அலேயில் மோதி இளேத்து துரும்பாகி இருப்பாய் என்று நினேக்கிறேன்.

நான் உன்னே விட வயதில் சிறிவள்; ஆனுலும் காலப் போக்கிலும், அனுபவத்திலும் ஒரு கிழவியாகிவிட்டேன்

என்பதை ஒப்புக்கொள்கிறேன். எனக்கு இப்பொழுது குடும்பக்கவலைதான் அதிகமாய் இருக்கிறது. என்னுடைய ஆசையை, உணர்ச்சியை நாணகச் சிதைத்துவிட்டேன். என்று உன்னிடம் பெருமை பேச முடியாது. இயற்கை தான் அதை மழுங்க அடித்திருக்கவேண்டும். என் கண வரின் மனம் எப்படியோ? ஆனால் அவருக்கு நான் கட மைப்பட்டவள். அவருடைய மனதறிந்து அவரைத் திருப்தி செய்ய நான் எப்பொழுதும் தயாராய் இருக் கிறேன்.

இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த அவர் இப் பொழுது முற்றிலும் மாறுதலடைந்திருக்கிறார் என்பது கண்கூடாகத் தெரிகிறது. அன்று எனக்கு சோப்பும், பூவும் வாங்கிக்கொண்டு வந்தவர் இன்று குழந்தைக்காக பொம்மை, கிலுகிலுப்பை என்று ஏதாவது வாங்கிக்கொண்டு வருகிறார். இந்த நிலைமை நீடிக்குமோ, அல்லது மறுபடி யும் பழைய பாதையில் திரும்புமோ, எனக்குத் தெரியாது. இவ்வளவு விஷயங்களையும் நான் உணர உன் கடிதந் தான் தூண்டுகோலாயிருந்தது. நீ என்னைவிட வயதில் மூத்தவள். படித்தவள். கடைசியாக ஒன்று நான் உனக் குச் சொல்லுகிறேன். கஷ்டமோ, சுகமோ இப்படியே எங்கள் வாழ்க்கை நடந்து கொண்டுபோனால் சரி. அதுவே இன்ப நிறைவுள்ளதாக இருக்குமென்று நான் நம்பு கிறேன்.

நீ ரகுநாதன் என்ற ஒரு மாணவனைப்பற்றி எழுதியிருந்தாய். அதைப்பற்றி உனக்கு நான் சொல்லப் போகும் யோசனையை உகந்ததாக ஒருவரும் கருதமாட்டார்கள். இருந்தாலும் என் மனதிலுள்ளதைச் சொல்லி உனக்குச் சரியான வழியைக் காட்டுகிறேன் என்ற திட நம்பிக்கையுடன் உனக்குச் சொல்லத் துணிகிறேன். உன்னுடைய ஆசை, மனவிருப்பம் நிறைவேற வேண்டும். இல்லாவிட்டால் அந்த நினைவின் தாபத்தில் மெல்லிய மலர் போன்ற நீ வாடி வதங்கி விழுந்து விடுவாய். ரகுவின் மீது குறை சொல்லுவதற்கு ஒன்றுமில்லை. உன்னுடைய மனோநிலையைப் போன்றது தான் அவனுடைய மனோநிலையும். நீ ஏதோ கண்ணியோ, வலையோ வீசினேன் என்றாயே, அதுபோலவே அவனும் வீசியிருக்கிறான். அவனை உனக்குப் பிடித்திருக்கிறதா? புத்திசாலியான வாலிபன் தானே? உன் மனத்திற்குப் பிடித்த புத்திசாலியான வாலிபனாக அவன் இருப்பின் அவனை நீ மணந்து கொள்வதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? உணர்ச்சி வேகத்தில் உயிரைக்கூட கொடுப்பதாகச் சொல்லலாம். அதற்காக உயிரைக்கொடு என்று சொல்லுவது அர்த்தமாகாது. "ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை முடித்து வை" என்பார்கள். ஆயிரம் பொய் சொல்வதினால் ஒரு பெண்ணைப் பெற்றவர்களின் மனோபீஷ்டம் சித்தியாவது தான் முக்கியம். அவனைக் கல்யாணம் செய்துகொண்டு நீ கட்டுப்பாடாய் நடப்பதின் மூலம் அவனையும் கட்டுப்பாடு உடையவனாகச் செய்துவிடலாம்,

அவன் கடிதம் எழுதியதை வைத்துக்கொண்டு அவனை வெறுக்காதே. நீ இப்பொழுது ஒரு ஊன்று கோல் தேடுவதுபோல அவனும் தேடினன். இதில் பிச கொன்றுமில்லை. உனக்கோ அவனுக்கோ இது எப்படிப் படிப்பட்ட பருவம்? இனிமேல் தான் உங்களுக்கு வாழ்க்கை தொடங்குகிறது என்று சொல்லலாம். இந்த வயதில் உன்னைப்போன்ற பெண்கள் மிகவும் ஜாக்கிரதை யாக நடந்துகொள்ள வேண்டும். எதையும் அவசர மாக முடிவு செய்து விடக்கூடாது. அடக்கமாகவும், பொறுமையாகவும், புத்திசாலித்தனமாகவும் நடந்து கொள்ளவேண்டும். நமக்கொரு பாதுகாப்பாகவும், நம் மைப்போன்ற பெண்களுக்கு வாழ்க்கை நலனை தேடித் தரவும் பெரியோர்கள் இருப்பது நல்லது. ஆனல் நீ மிகவும் சுதந்திரமாக விடப்பட்டிருக்கிருய். உன்னுடைய வருங்கால வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு முழுதும் உன்னுடையதாகி விட்டது. படித்தவளும் புத்திசாலியுமாகிய உனக்கு நான் அதிகம் எழுத வேண்டாம் — வாழ்வின் முதற்படியில் கைகோர்த்து ஏறும்போது மிகவும் ஜாக்கிரதையாக ஏற வேண்டும் என்பதை நினைவில் வைத்துக்கொள்.

உனக்கு இன்னும் எவ்வளவோ சொல்லலாம். எனக்கு பொழுதும், சக்தியும் இல்லை. இன்று ஆபீஸ் லீவு. அவர் தூங்குகிருர். குழந்தை அழுகிறது. துணிகளைத் தோய்த் தபடியே வைத்திருக்கிறேன். காபி வைக்கவேண்டும்.

இல்லாவிட்டால் எழுந்து கோபித்துக்கொள்வார். மற்ற படி இங்கு மாமியார், மாமனார், அவர், குழந்தை எல்லோரும் சௌக்யம். நீ எழுதும் பதிலில் உன்னுடைய விவாகத் தேதியைக் குறிப்பிடு. முடிந்தால் வருகிறேன்.

இப்படிக்கு உன் அன்புள்ள,

கமலா.

# 3

# சுந்தரி

தஞ்சை 5—10—48.

க்ஷேமம்,

அன்புமிக்க கோமதிக்கு

இந்த ஐந்து வருடங்களுக்குப் பிறகு உன்னிடம் இருந்து எனக்குக் கடிதம் கிடைத்தது ஆச்சரியப்படக் கூடியதாய் தான் இருந்தது. தவிர உனக்குப் பதில் எழுதவும் எனக்குத் துணிவு ஏற்பட்டது. உனக்கும் எனக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம். உன்னை மரியாதைக்காக சகோதரி என்று நான் கூப்பிட்டால் கூட உலகம் நகைக்கும். உனக்கும் எனக்கும் இருக்கும் அத்யந்த நட்பைக்கூட உலகம் சந்தேகிக்கும்.

அவரவர்கள் செய்யும் தொழில்களுக்குத் தகுந்தாற் போல் ஜாதி வேறுபாடுகள் செய்து நாமகரணம் சூட்டியிருப்பது போல் நானும் உலகில் மனிதர்களுக்காகத் தொழில் செய்யும் தொழிலாளியாகி ஜாதி வேருகப் பிரிக்

கப்பட்டவள். தொழில் முறைப்படி எனக்கிடப்பட்ட ஜாதீய நாமகரணம் "தாஸி". நான் மனித ஜாதிக்கு எவ்வளவு இன்றியமையாதவளாய் இருக்கிறேன் என்பதை உனக்கு இங்கு விவரிக்கவேண்டிய அவசியமிருக்காது.

உன் கடிதத்தைக்கண்ட பிறகு உனக்கொரு நீண்ட கடிதம் எழுதவேண்டுமென்று எனக்கு ஆவல் தோன்றியது. ஏனென்ருல் என்னை சுற்றியிருப்பவர்களெல்லாம் என்னைப்போன்றவர்களே. அவர்களிடம் என்னுடைய மனதில் உள்ளதைத் திறந்து காண்பிப்பதில் எவ்வித பலனையும் நான் எதிர்பார்க்க முடியாது அவர்களிடம் சொல்லுவதிஞல் என் மனதிற்கு சாந்தியும் ஏற்படாது. பிச்சைக்காரன் தன்பசியை பிச்சைக்காரனிடமே சொல்லிக் கொள்வதில் என்ன லாபம்? பெண்ணினத்தில் உயர்ந்த ஸ்தானத்திலிருப்பவர்களாக மதிக்கப்படும் உன்போன்ற குடும்ப ஸ்திரிகளிடம் என்னுடைய உள்ளந்தரங்கத்தை சொல்லுவதில் மனதிற்கு சாந்தியும் நிம்மதியும் ஏற்படுமென்றே இக்கடிதம் எழுதுகிறேன்.

ஊரில் சில தெருக்கூத்தாடிகள் வருவார்கள் நீ பார்த்திருக்கலாம். 'சுளீர் சுளீர்' என்று திரேகத்தில் சாட்டையால் அடித்துக்கொள்வார்கள். அடிபட்டு அடிபட்டு அவனுடைய திரேகம் காய்த்துப் போயிருக்கும். ஆனல் அதைப்பார்க்கும் பொழுது நமக்கு பரிதாபகரமாயிருக்கும். அதைப்போல் தான் எங்கள் ஜாதியும். நாங்களெல்லாம் உணர்ச்சி மழுங்கிய மக்கு பொம்மைகள் என்பது எங்

களுக்குத் தான் தெரியும். அழகாக சிங்காரித்துக் கொள்வோம்—ஹிதமாக சிரித்துச் சிரித்துச் பேசுவோம்—உளுத்துப்போன உளுந்தை விற்க செட்டியார் உபயோகிக்கும் வியாபார தந்திரம் போல. என்னுடைய அனுபவத்தில் நான் சொல்லுகிறேன் — மனிதர்கள் எங்களிடம் வந்து ஏமாந்து போனதாகவோ — திருப்தியில் குறைவுள்ளவர்களாகவோ துளிக்கூடக் காட்டிக்கொண்டதில்லை. எங்களால் அவர்களுடைய ஆவல் பூர்த்தி செய்யப்படுகிறது என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. ஒருவருடைய மனத்தூண்டுதலை சமாளிக்க இருவருடைய மன ஒற்றுமையும், ஏகோபித்த மன அபிப்பிராயமும் இருக்கவேண்டுமென்பது இவ்விஷயத்தில் அவசியமில்லை. பிறருடைய பசியை அறிந்து ஹோட்டல்காரர் சாப்பாடு போடமுடியுமா? பசிப்பவர்கள் தான் காசு கொடுத்து ஹோட்டலில் போய் சாப்பிடவேண்டும். ஹோட்டலில் வித்தியாசமில்லை. காசு கொடுப்பவர் யாராய் இருந்தாலும் பார்தகமில்லை. எல்லோருக்கும் சாப்பாடு உண்டு. இதைவிட எங்கள் பிழைப்பை வியக்தமாக உன்னிடம் நான் சொல்லமுடியாது.

முக்கியமாக உன்னிடம் நான் சொல்லப்போவது என்னைப்பற்றிய விஷயமே. இருந்தாலும் முன்னால் இவ்வளவு சொன்னால் தான் என்னைப்பற்றி நீ சரியாகப்புரிந்து கொள்ள முடியும். என் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் தான் நீ குடியிருந்தாய். நான் அப்பொழுது எந்த விஷயத்தையும் உன்னிடம் சொல்லாமல் ரகசியமாக வைத்துக்

கொண்டதில்லை. இப்பொழுதும் எதையும் ரகசியமாகக் காப்பாற்றப் பிரியப்படவில்லை. நீ கணவனுக்குப் பயந்து என்னோடு பழகினாய்—ஒருநாள் நீ என்னோடு பேசியதைப் பார்த்துவிட்டு உன் கணவர் உன்னைக் கண்டித்தார். இதை நீ மறந்திருக்க மாட்டாய் என்று நினைக்கிறேன். உன்னிடம் எல்லா ரகசியங்களையும் சொல்லியிருக்கிறேன் என்று சொன்னேனல்லவா — ஆனால் ஒரு ரகசியத்தை மாத்திரம் உன்னிடம் சொல்லவில்லை. ஏனென்றால் அது உன் சம்பந்தப்பட்டதாய் இருந்ததால் தான். அதை உன்னிடம் அப்பொழுது சொல்லியிருந்தால் இப்பொழுது உனக்கு இவ்வளவு அந்தரங்கத்துடன் கடிதம் எழுத நேர்ந்திருக்காது. உன் கணவர் ஆபீஸ் வேலையாக இரண்டு நாள் சென்னை சென்றாரே உனக்கு ஞாபகம் இருக்கிறதா ? பாவம் ! நீ அவர் சென்னை போயிருக்கிறார் என்று நினைத்துக் கொண்டிருந்தாய்; ஆனால் அவர் அந்த இரண்டு நாளும் என் வீட்டில் தானிருந்தார். ஹோட்டல் காரன் தன்னுடைய விருந்தாளியிடம் சாப்பாட்டிற்காகப் பணம் வாங்குவதுண்டா? அவர் சென்னை செல்லக் கொண்டுவந்த பணத்தில் ஒரு தம்பிடிகூட சிலவழிக்காமல் வீடு வந்து சேர்ந்தார். உன்னுடைய நன்மையை உத்தேசித்து இந்தத் தொடர்பை அப்பொழுது நானே அறுத்து விட்டு விட்டேன். இத்தனை நாட்களுக்குப் பிறகு இது விஷயமாக அவரை ஏதாவது கேட்டு கலகம் உண்டாக்கிக் கொள்ளாதே. நீயாக ஏதாவது நினைத்துக்கொண்டும் மனதைக் குழப்பிக்கொள்ளாதே.

நான் ஏதோ சொல்ல நினைத்து எங்கோ போய்விட்டேன். எனக்கு இப்பொழுது வயது நாற்பதாகிறது. நீ என்னைவிட வயதில் மூத்தவளோ—இளையவளோ எனக்குத் தெரியாது. என்னுடைய பதினாறுவது வயதிலிருந்து இன்று வரையில் எடுத்த புகைப்படங்களைப் பார்க்கும் பொழுது, இப்பொழுது என் அழகு, திரேகக்கட்டு இவைகள் எவ்வளவு மாறுதலடைந்து விட்டன என்பது எனக்கு நன்கு தெரிகிறது. என்னைவிட வயதில் முதிர்ந்த என்னுடைய சமூகப் பெண்களில் சிலர்—ஏன்? கிழவிகள் கூட எப்படியோ, பல விதத்திலும் தங்கள் வயோதிகத்தை மறைத்துக் கொள்ளப் பிரயத்தனப்படுகின்றனர். அதற்குச் சினிமாகூட ஒரு வழிகாட்டியாக இருக்கிறது. கிட்டத்தட்ட ஐம்பது வயதாகிய சாரதா "அதிரூப சுந்தரி" என்னும் படத்தில் நடித்து விட்டு வந்திருக்கிருள். அந்த முகம் சுருங்கிய கிழவியை எப்படியோ படத்தில் அதிரூப சுந்தரியாகவே காட்டிவிட்டனர். ஹோட்டல் கட்டிடம் பழமையாய் இருந்தால் என்ன? வியாபாரந்தானே நடக்க வேண்டும்?

எனக்கு இந்த வாழ்க்கையில் அலுப்பேற்பட்டு விட்டது. ஊரில் என் சிநேகிதிகள் ரகசியமாகச் சொல்லிக் கொள்ளுகிருர்களாம். சுந்தரிக்கு என்ன? அவள் நிறைய பணம் சேர்த்துவிட்டாள்; இனிமேல் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்று. அவர்கள் சொல்லுவதில்

ஒன்றும் பிசகில்லை. இருந்தாலும் அவர்களுடைய ஹிரு தயம் போலல்ல என்னுடைய ஹிருதயம். அவர்களைப் போல் முழுவதும் பட்டுப்போன மரமல்ல நான். எனக்குக் காசின்மேல் ஆசையில்லை என் தாயும் நானும் சேர்த்து வைத்திருப்பது ஏழு சந்ததிக்கு கௌரவமாக வாழப் போதுமானது. மங்கிய என் சௌந்தர்யத்தை மாவு பூசி மறைக்க நான் விரும்பவில்லை. இந்த நாற்பது வயதுக் குள் எவ்வளவோ அனுபவித்து விட்டேன். ஆனால் இன் னும் எனக்கு வாழ்க்கையில் அலுப்புத் தோன்றவில்லை. என்னுடைய யௌவனம் மறைந்து அழகு குலைந்தாலும் மன உணர்ச்சி மாத்திரம் மழுங்கவில்லை. சுகத்தை விரும் பும் ஆசை அழியவில்லை. தலை நரையோடிவிட்டது; கண்கள் குழிந்து பிரகாசம் குறைந்து போயிற்று. உடல் தளர்வடைந்து விட்டது. ஆனால் உள்ளத்தின் உணர்ச்சி ஊற்று மாத்திரம் வற்றவேயில்லை. என் ஆசையை — ஆவலை பூர்த்தி செய்து கொள்வதற்காகவாவது நான் பிற ரைப் போல் வேஷம் போடலாம். ஆனால் இவ்வளவு வயதிற்குப் பிறகு அந்த வழியில் செல்வதற்கு எனக்கு வெறுப்பாக இருக்கிறது.

முன்பு என் வீட்டிற்கு ஒரு பாட்டு வாத்தியார் வரு வாரே உனக்குத் தெரியுமா? சேஷகிரி பாகவதர் என்று அவர் பெயர். பாவம்! அவருடைய மனைவி போன வரு ஷம் இறந்து போய்விட்டாள். இப்பொழுது அவர் என் வீட்டோடு இருக்கிறார். அவரை நான் தான் வலுவில்

அழைத்துக்கொண்டேன். அந்த ஏழை பிராமணரிடம் எவ்வளவு பணமிருக்கிறது என்பது ஊரார் அறிந்த விஷயம். எந்த பிள்ளையார் கோயிலிலாவது எப்போதாவது ஒரு காலக்ஷேபம் நடந்தால் வில்வ தளத்தை வைத்து ஒரு தேங்காய் மூடி கொடுப்பார்கள். மற்றப்படி சாரீரக் கோளாறுள்ள நான்கு பெண்களுக்கு உயிரைவிட்டு கதறி சங்கீதம் சொல்லிக்கொடுத்தால் நாலு இரண்டு கிடைக்கும். இதனால் பாகவதருக்கும் எனக்கும் ஏற்பட்டுள்ள பாந்தவ்யம் தொழில் முறையில் ஏற்பட்டதல்ல என்பதை நீ அறிந்து கொள்வாய். என்னுடைய விளையாட்டு ஆசையை தீர்க்க அவரை ஒரு கருவியாக வைத்திருக்கிறேன் என்றுகூட சிலர் நினைக்கலாம். ஆனால் அந்தரங்கம் வேறு. வாழ்வில் ஏற்பட்ட ஆசை உணர்ச்சியில் நிறைவு ஏற்படவில்லை. என் வாழ்வை நிறைவாக்கிக் கொள்ளத் தான் அவரை விரும்புகிறேன். என்னுடைய பணம் — நகை — எல்லாவற்றையும் அவரது காலடியில் கொட்ட நான் தயாராய் இருக்கிறேன். நாங்கள் இருவரும் புருஷன் — மனைவியாகி விடவில்லை. சாஸ்திரோக்தமாக எவ்வித பிணைப்பும் எங்களுக்குள் இல்லை. ஆனால், என்னுடைய வாழ்க்கை ஆசையின் கடைசிப் பொழுதை அவருடைய தயவால் சுகமாகக் கழிக்க நான் விரும்புகிறேன்.

பாவம்! என்னால் அவருடைய மண்டை கிடந்து ஊரில் உருளுகிறது. அவர் என்னைக் கெடுத்து விட்டா

ராம்; மயக்கி விட்டாராம். என் பணத்தைக் கொள்ளை யடிக்கிருராம். இவ்வளவையும் கேட்டுக்கொண்டு பாவம், அந்த சாது எனக்கு அடங்கிப் பொறுமையாய் இருப்பது நான் செய்த பூஜாபலன் தான். அவர் என்னுடைய அழகைக்கண்டு மயங்கி விடவில்லை. அவர் என் பணத்தை விரும்பி வரவில்லை. நானும் பணத்தைக்காட்டி அவரைக் கூப்பிடவில்லை. அவர் தன்னுடைய இச்சையை பூர்த்தி செய்துகொள்ள என்னை நெருங்கவில்லை. நான் தான் என்னுடைய மனச்சுமையைக் கழிக்க அவரை அழைத்தேன். அவர் அதற்குக் கருணைவைத்து இணங்கினர். தாட்சண்யத்திற்காக—கடமைக்கு அடங்கி தர்மம் செய்யும் லோபியைப்போல. உலகம் எதை எப்படி எடுத்துக் கொண்டாலும் எங்களுக்குக் கவலையில்லை.

என் பணத்தையும் — சொத்தையும் எதிர் நோக்கி நிற்கும் உறவினர்களுக்கெல்லாம் ஒரு ஏமாற்றம். ஈனமாக கருதப்படும் ஒரு தர்ம வைத்திய சாலையும்—பெண்களுக்காக ஒரு பள்ளிக்கூடமும் கட்டப்படும். இது என் பாபத்தை போக்கச்செய்யும் புண்ணியமான காரியமில்லை. அனுவசியமாகக் குவிந்திருக்கும் பணம் பிரயோசனகரமான வழியில் சிலவிடப்பட வேண்டும் என்பதுதான் என் விருப்பம்.

இவ்வளவு தூரம் உனக்கு நான் எழுதியதெல்லாம் என் மனதிற்கு ஆறுதலான பதில் கிடைக்குமென்று எதிர்

பார்த்துத் தான், உன் கடிதத்தைப் படித்ததிலிருந்து உன் கணவரின் சௌக்யமும், உன் சௌக்கியமும் தான் தெரிகிறது. உனக்கு ஒரு குழந்தை இருக்குமென்று நான் எண்ணியது ஏமாற்றத்தை அளிக்கிறது. என்னைப் போல் அல்ல நீ என்பதை நினைக்கும் பொழுது உனக்கு ஒரு குழந்தை பிறந்திருப்பது போன்ற திருப்தியும், ஆவலும் எனக்கு ஏற்பட்டிருக்கும். மற்றபடி உன்னுடைய பதிலை நிமிஷத்திற்கு நிமிஷம் எதிர்பார்க்கிறேன்.

உன் அன்புள்ள சகோதரி

*தாஸி — சுந்தரி*

**உனக்கு ஏதாவது என்னிடமிருந்து உதவி வேண்டுமானல் நீ உரிமையுடன் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். நான் உனக்காகச் செய்யும் எந்த உதவியும் என் மனதிற்கு சந்தோஷத்தையும் நிம்மதியையும் உண்டாக்கும். உன் விருப்பம்.**

**சுந்தரி**

TAMIL NADU ARCHIVES LIBRARY 11570

# 4

# கோமதி

ஈரோடு 12—10—48.

க்ஷேமம்,

அன்புமிக்க சுந்தரிக்கு

உன் கடிதம் கிடைத்தது: உன்னுடைய உடலுறுதியும், யௌவன அழகும் அழிந்துவிட்டதென்று எழுதியிருந்தாய். உடனே உன்னைவிட மூத்தவளான என்னைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்தேன். உன்னைப்போல் என் தலை நரை யோடவில்லை. கண்கள் குழி விழுந்ததாகத் தெரியவில்லை. உடலும் இளைத்ததாகத் தெரியவில்லை. முன்னைவிட இப்பொழுது சிறிய மாறுபாடு இருந்தாலும் உன்னைப் போல் கிழவியாகி விட்டேன் என்று என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. கோயம்புத்தூரில் இருக்கும் என் தங்கை அபிராமியை உனக்குத் தெரிந்திருக்கும். பாவம்! இன்னும் அவளுக்கு முப்பத்தைந்து வயது பூர்த்தியாகவில்லை. அதற்குள் கிழவியாகி விட்டாள். உண்மையில்

அவளுடைய பெண்ணுக்கு சமீபத்தில் ஒரு பிள்ளைக்கு குழந்தை பிறந்திருக்கிறது. இது சரீரத்தை ஒத்ததாக இருக்குமென்றே நான் கருதவில்லை — நடைமுறையை ஒத்ததாக இருக்குமென்றே நான் நினைக்கின்றேன். எனக்கொரு குழந்தை பிறந்திருக்கும். அதனால் அளவற்ற திருப்தியையும் சந்தோஷத்தையும் அடைந்திருப்பேன் என்று நீ எழுதியிருந்தாய். எனக்குக் குழந்தையில்லாதது அவ்வளவு குறையாகப் படவில்லை. என் தங்கைக்குப் பிறந்த குழந்தைகளை எனக்குப் பிறந்ததாக எண்ணி சந்தோஷமும் திருப்தியுமடைகிறேன்.

உங்கள் ஜாதி—தொழில் இவைகளை எல்லாம் பற்றி நீ எழுதியிருந்தாய். உங்களைப்பற்றி முன்பு தெரிந்து கொண்டதை விட இப்பொழுது இன்னும் கொஞ்சம் அதிகமாக தெரிந்து கொண்டதற்கு நான் சந்தோஷமடைகிறேன். உங்கள் பிழைப்பு எவ்வளவு கேவலமாக இருப்பினும் உன்னுடைய முடிவான காரியங்களிலிருந்து உங்களுக்கு இவ்வளவு சுதந்திரம் இருப்பதை எண்ணி நான் பொறுமைப்படுகிறேன்.

நீ என்னிடம் உன்னுடைய உள்ளத்தை உடைத்துப் புலம்பிவிட்டாய். நான் உனக்கு எழுதும் இந்த பதிலில் என்மீது நீ பச்சாதாபப்படும்படி நேரிடும் என்பது மாத்திரம் உண்மை—என்னுடைய உள்ளத்தை இக்கடிதத்தின் எழுத்துக்கள் உனக்குப் படம்பிடித்துக் காட்டுமென்று

நான் நினைக்கிறேன். உன்னுடைய கதையை உன்னு டைய சுற்றத்தாரிடம் சொன்னால் எப்படி நகைப்பார் களோ அதேபோல என்னுடைய கதையை என் சுற்றத் தாரிடம் சொன்னால் நகைப்பது மாத்திரமல்ல; நான் குடும்பத்திற்கே லாயக்கற்றவள் என்று சொல்லிப் பிரஷ் டம் செய்து ஒதுக்கிவிடுவார்கள்.

உனக்கு வயது நாற்பதாகி விட்டது; உடல் நலிந்து விட்டது. ஆனால் உணர்ச்சி உறைந்து விடவில்லை என்று எழுதியிருந்தாய். உன்னைவிட இரண்டு வயது பெரியவள் நான். என் அழகு குலையவில்லை—அங்கம் நலியவில்லை— உணர்ச்சி மழுங்கவில்லை. நீ உலகின் கட்டுப்பாடுகளுக்கு புறம்பானவள். ஆனால் நான் குலஸ்திரீ — ஒருவருக்கு மனைவி. நீ விரும்பிய பாதையில் நடக்கலாம். ஆனால் நான் எனக்காக வகுக்கப்பட்ட பாதையில் தான் நடக்க வேண்டும். அது கல்லும் முள்ளும் நிறைந்த காடா யிருந்தாலும் சரியே. உன் உணர்ச்சி நல்ல பயனுள்ள வயல்களில் பாயும் வாய்க்கால் போல் — கட்டாந்தரை யைச் சுற்றிச் சுற்றிவந்து மறுபடியும் மடுவில் விழும் வாய்க்கால் போல் என் உணர்ச்சி.

என் கணவரைப்பற்றி சில விஷயங்களை உனக்குச் சொன்னால் தான் என் மனது நிம்மதியடையும். தண்டு-கமண்டலம்—காஷாயம் இவைகள் தான் பாக்கி—மற்ற படி அவர் முக்கால் சந்நியாசியாகி விட்டார். சாப்பாடு

கூட வேண்டாம். சதா சர்வகாலமும் ஏதாவது வேதாந்த விசாரணை செய்து கொண்டிருந்தால் போதும். குடும்ப வாழ்க்கையில் அவருக்கு அலுப்பு ஏற்பட்டிருக்கலாம்.' உணர்ச்சி உன்மத்தம் பிடித்ததாய் இருக்கலாம். மனைவி—அவளது மனம்—அவளது விருப்பம்—இவைகளையெல்லாம் அலக்ஷியமாகப் புறக்கணிக்க முடியுமா? அவரிடம் எவ்வளவோ ஜாடை மாடையாகச் சொல்லிப் பார்த்தேன். என் மனதைத் திறந்தும் சொல்லிப் பார்த்தேன்—இவைகளுக்கு எல்லாம் அந்த கசப்படைந்த வேதாந்த உபதேசந்தான் பதில். உலகம் மாயை; திரேகம் அநிந்யம்; உணர்ச்சி ஆசை இவைகளெல்லாம் பேய் பைசாசங்கள். இது தான் அவர்கற்ற பாடம். ஓட்டைப் பானையில் தண்ணீர் முகப்பது போல ஸம்ஸார சாகரத்திடையே இவைகளெல்லாம் வெட்டிப் பேச்சாகத்தானே இருக்க முடியும்?

ஒருநாள் அவரிடம் 'இந்த அநித்தியமான உலகிலிருந்து—ஸ்திரமற்ற உடலிலிருந்து—உணர்ச்சி—ஆசை இந்த பைசாசங்களிடமிருந்து தற்கொலை செய்துகொண்டு விடுதலை பெறப்போகிறேன்' என்றேன் பதட்டத்துடன். அதற்கு அவர் சாவாதானமாக 'நீ சுத்த அசடு. இன்னும் உன் மனது பக்குவமடையவில்லை' என்று சொல்லி விட்டு வெளியே போய்விட்டார்.

மனம் பக்குவமடைய வேண்டுமென்ருல் மனதை இரும்பாகச் செய்துகொள்ள வேண்டுமா? ஹிருதயத்தை வரண்டதாகச் செய்துகொள்ள வேண்டுமா? அது என்னுல் முடியாது; அப்படி நான் பக்குவமடையவும் விரும்பவில்லே.

நான் அவருடைய மனேவி; என்னுடைய விருப்பத்தை திரஸ்கரிக்க அவருக்கு உரிமையிருக்கும்பொழுது, நான் போகும் பாதை தவருனது என்று அவர் சொல்லுவது எப்படி நியாயம்! உலகம் வேண்டுமாஞல் என்னே திரஸ்கரிக்கட்டும்; தூற்றட்டும்—சபிக்கட்டும். ஆனுல் எனக்கு ரத்த ஓட்டமுள்ள இருதயம் இருக்கிறது; உணர்ச்சியின் படபடப்பு அங்கே இருக்கிறது என்பதை சிந்தனே செய்யுமா உலகம்?

நீ தாஸி — இருந்தாலும் சகோதரி போல் பழகும் உன்னிடம் நான் எதையும் மூடிவைக்க விரும்பவில்லே. சாவித்திரி எமனேடு போராடி தன் கணவனின் உயிரை மீட்டு வந்தாள். இது தெரிந்திருந்தும் இந்த புருஷர்களின் சந்ததிக்கே அன்றிலிருந்து இன்றுவரை நன்றி இல்லே. ஒரு மனேவியின் சிறு ஆவலே தணிக்க ஒரு புருஷன் மறுத்தால் — ஸ்திரீ ஜாதியே இதை எண்ணி இதற்காகத் தலே இறக்கம் கொள்ளவேண்டும்.

ஒரு நாள் இரவு; மணி பன்னிரெண்டிருக்கும்; எனக்கு தூக்கம் வரவில்லே. மனதில் எண்ணச்சுமை ஏற

படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தேன். அணையை உடைத்துக்கொண்டு வரும் பிரவாகம் போல ............மனதில் ஓர் ஆசை. அவர் மாடி வரண்டாவில் கட்டிலில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தார். என்னை அறியாமலேயே நானும் மாடிக்கு வந்து விட்டேன். மெதுவாக அவர் சயனித்திருக்கும் கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்தேன். திரேகம் படபடவென்று அடித்துக் கொண்டது. என்னுடைய கரஸ்பரிசம் அவர்மீது பட்டு விட்டது போலிருக்கிறது. அவர் திடுக்கிட்டு கண்விழித்து எழுந்து உட்கார்ந்தார்.

"யாரது" என்றார்.

"நான் தான்" என்றேன் அசட்டுத் திருடன் உறவு முறை சொல்லிக் கொள்வது போல.

அவர் என்னை உற்று நோக்கி விட்டு "கோமு! ஏன்? என்ன விசேஷம்?" என்றார்.

எந்த விசேஷத்தை அவரிடம் நான் சொல்ல............?

"ஒன்றுமில்லை" என்று தயக்கத்துடன் சொல்லி விட்டு நிறுத்தினேன்.

மறுபடியும் கலவரத்துடன் என் முகத்தை வெறிக்கப் பார்த்தார். அப்படிப் பார்த்ததினால் அப்போதைய என்னுடைய மனோநிலையை அவர் எவ்வளவு தூரம் உணர்ந்து கொண்டாரோ?

நான் மௌனம் சாதித்தேன். ஆனால் என் நெஞ்சி லுள்ள அவ்வளவையும் அவரிடம் சொல்லி அழுதுவிட வாமா என்று நினைத்தேன். தலை குனிந்தபடியே உட்கார்த் திருந்தேன்; நெஞ்சுக் குமுறலுடன். அவர் என் முகத் தை மறுபடியும் உற்று கவனித்து விட்டு ' ஹூம் " என்று முனகிவிட்டு எழுந்து அப்படியும் இப்படியுமாக எழுந்து உலாவ ஆரம்பித்தார். நான் கட்டிலில் உட்கார்ந்த படியே கற்சிலையை வரம் கேட்பது போல் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

மணி ஒன்று அடித்தது; அவர் ஏதோ முடிவுக்கு வந்தவர் போல் " கோமு! ஏன் மனதை அலட்டிக்கொள் கிருய்? போ! நீ போய் படுத்துக்கோ! என்ன இருந் தாலும் மனதை கட்டுபடுத்துவது தான் எப்பொழுதும் நல்லது — போ! நான் கொஞ்சம் நிம்மதியாய் தூங்கு கிறேன் " என்ருர்.

ஆம்! அவர் நிம்மதியாகத் தூங்கட்டும் என்று நான் வந்துவிட்டேன். ஆனல் நான் எவ்வளவு நிம்மதியாகத் தூங்கியிருப்பேன் என்பதை உணர்வதற்கு அவருக்கு சக்தியிருக்குமா?

நான் கல்லும் முள்ளும் நிறைந்த இந்தப் பாதை யில் தான் நடக்கவேண்டும். இது மனித சமூகத்தின் முடிவு; சட்டம். என்? பரம்பரை தர்மமாகக்கூடச் சொல் லலாம். அரிச்சந்திரன் சந்திரமதியை ஏலங்கூட கூறி

விட்டான். நளன் தமயந்தியை நடுக்காட்டில் நடுநிசி யில் விட்டு விட்டு ஓடிவிட்டான். திரௌபதி நடு சபை யில் மானபங்கப் படுத்தப்பட்ட பொழுது ஒரு புருஷனல்ல, ஐந்து புருஷர்கள் கற்சிலையாகி நின்றனர். அகல்யை வருடக்கணக்காகக் கல்லாகக் கிடந்தாள்—இவைகளெல் லாம் தர்மம்; இவைகள் தான் ஸ்திரீகளின் உயர்வைக் காப்பாற்றும் தர்மங்கள் — சந்திரமதி — திரௌபதி — தமயந்தி இவர்களைவிட நாம் எந்த விதத்தில் துக்கத்தை அதிகமாகச் சுமந்திருக்கிறோம்? இவைகளெல்லாம் பெண்களின் பெருமைக்குச் சான்றாக இருக்கலாம். நாம் பெருமையும் அடையலாம். தர்மங்களை தலையில் சுமந்து கொண்டு மனித சமூகத்தில் ஒரு சிலர் சுயநலத்தோடு ஸ்திரீகள் மீது ஈவு, இரக்கம், பச்சாத்தாபம் இவைகளில் ஒன்றாவது இல்லாமல் அவர்களை மிகவும் கேவலமாக நடத்துகிறார்கள்.

முன்பெல்லாம் ராமாயணம், பாகவதம், பாரதம் இவைகளைப் படிப்பதில் நான் எவ்வளவு தீவிரமாக முனைந் திருப்பேன் என்பது உனக்குத் தெரியும். பதிவிரதா தர் மத்தைபற்றி உன்னிடம் எவ்வளவு சொல்லியிருக்கிறேன். இப்பொழுது அவைகளைக் கண்டால் எனக்குக் கசப்பா யிருக்கிறது. என்னுடைய பாதிவிருத்யத்தையும் ஒழுங் கையும் நான் காப்பாற்றிக் கொள்ளத் தயார் — ஆனால் அதற்கு அனுகுணமாக நிற்கும் என்னுடைய சிறு அபி லாஷையையும் எனக்கு பிச்சையாக அளியுங்கள் என்று

நான் என் கணவரை வேண்டிக் கொள்வதில் என்ன பிசகு இருக்கிறது ............?

உனக்கு இன்னும் எத்தனேயோ எழுதலாம்; என்னுடைய வெட்கத்தை விட்டு இன்னொரு விஷயத்தையும் உன்னிடம் சொல்லிவிடுகிறேன். பசி மனிதனே மிருகமாக அடித்து விடுகிறது. பசியினுல் திருடுகிருன்; பசியினுல் பொய் சொல்கிருன்; பசியினுல் கொலேக்கூடச் செய்துவிடுகிருர்கள். மனிதனே இந்த பசிப்பேய் வந்து பிடித்து விட்டால் அவன் எப்படியாவது அதை ஒழிக்க பாடு படுகிருன். நீதி, நியாயம், தர்மம், இரக்கம், பொறுமை இவைகளேப்பற்றி சிந்திப்பதற்கே அப்பொழுது சந்தர்ப்பம் ஏற்படுவதில்லே. இந்தப் பசியைப்போல் தான் மன உணர்ச்சியும்; என்னுடைய வாழ்க்கையின் ஒழுங்குப் பாதையிலிருந்து தன் பசியை தீர்த்துக்கொள்வதற்காக வேருெரு பாதையில் செல்ல இச்சைப்படுகிறது என் மனம். இதை நான் எவ்வளவு சுலபமாகச் சொல்லிவிட்டேன்! ஆனுல், இதை உலகம் அறிந்தால்............ உன்னேப்போல தொழில் முறையில் பழகும் தாஸி கூட என்னேவிட உயர்வானவளாகக் கருதப்படுவாள்.

மாயவரத்தில் வெங்கட்ராவ் என்று என் கணவருக்கு ஒரு சினேகிதர். அவர் அடிக்கடி கோர்ட்டுக் காரியமாக எங்கள் ஊருக்கு வருவார். எங்கள் வீட்டில் தான் அவர் வந்த பொழுதெல்லாம் தங்குவது வழக்கம். நான்

அவரோடு தாராளமாக பழகியதில்லை. என் கணவரோடு பழகும் எத்தனையோ சினேகிதர்களில் அவரும் ஒருவர் என்பது தான் அவரைப்பற்றி நான் விசேஷமாகத் தெரிந்து கொண்டது. என் கணவர் திருவண்ணுமலை சென்றிருந்த பொழுது அவர் வந்திருந்தார். என் கணவர் ஊரிலில்லை என்பது தெரிந்ததும் அவர் ஹோட்டலில் போய் தங்கு வதாகச் சொன்னர். ஆனல் நான் தான் அவரை இங் கேயே தங்குங்கள். அதனல் பாதகமில்லை என்றேன். இதை நான் வேண்டுமென்று செய்யவில்லை. இதை வித் தியாசமாகக் கருதவும் இல்லை. என் கணவருக்கு அவ ருடைய நண்பர்களிடமுள்ள நம்பிக்கையும் மதிப்பும் எனக்குத் தெரியும்.

வீட்டில் ஒருவரும் இல்லாததால் விருந்தினராய் வந்தவரின் ஒவ்வொரு சௌகரியங்களையும் நானே கவ னிக்க வேண்டியிருந்தது. அன்று அவருக்கு நான் சாப் பாடு போடுகிற பொழுது என்னுடைய கணவரின் ஞாபகம் எனக்கேற்பட்டது. ஏனென்ருல் என் கணவரைத் தவிர இதுவரையில் வேருருவருக்கும் தனியாக இப்படி நான் அன்னமிட்ட தில்லை. அந்த மனிதர் தலை குனிந்தபடியே 'வேண்டாம் – போதும் - ஹூம்'–என்ற வார்த்தைகளோடு தன் போஜனத்தை முடித்துக்கொண்டார்.

எண்ணம் என்பது ஊற்று நீர் போல - ஏன்? அலை எழுச்சிபோல - அலை சிறிது சிறிதாக பெரிதாகி கரையில்

வந்து மோதி அழிவது போல எண்ணத்தின் வளர்ச்சி அலை ஏதாவது ஒரு கரையில் வந்து மோதினுல் தான் நிம்மதி ஏற்படும் — ஒரு கரையைக் கண்டுவிட்டது எண்ணம். வெங்கட்ராவ் — ஆம் அங்குதான் அது வந்து மோதியாக வேண்டும் - என் மனப்புதரில் அதுவரையில் உறங்கிக்கொண்டிருந்த உணர்ச்சிக் கரையான் விழித்துக் கொண்டு விட்டது. சிறிது சிறிதாக மனதை அரிக்கவும் ஆரம்பித்துவிட்டது.

அன்று சாயந்திரம் கிணற்றடியிலிருந்து "ஹா" என்று சப்தம் கேட்டது. ஓடிப்போய் பார்த்தேன். வெங்கட்ராவ் கிணற்றடியில் தொட்டிக்குப் பக்கத்திலிருந்த பாசியில் வழுக்கப்பட்டு விழுந்து கிடந்தார். அவரை அந்த நிலையில் பார்த்ததும் எனக்கொன்றும் தோன்றவில்லை. சட்டென்று அவரிடம் நெருங்கி அவரது இருகைகளையும் பிடித்துத் தூக்கிவிட்டேன். அவர் அன்னிய புருஷனுயினும் நான் செய்ததை நியாய புத்தியுள்ள எவரும் குற்றமாகக் கருதமாட்டார்கள். ஆனுல், "பின்னுல் நடந்த நிகழ்ச்சிகள்............" அந்த நிமிஷத்தில் சறுக்கி விழுந்தவரை கைதூக்கிவிடும் உயர்ந்த மனேபாவம் தான் என் மனதிலிருந்தது. ஆனுல் அடுத்த நிமிஷம் என் மனேபாவம் மாறிவிட்டது. எங்கோ ஒரு பக்கத்தில் புகுந்து கொண்டிருந்த நெருப்பு குபீரென்று பற்றிக் கொண்டது. அவருடைய திரேக ஸ்பரிசம் என் மீது பட்டபொழுது என் திரேகம் நடுங்கியது. என் ஹிருதயத்

துடிப்பின் வேகம் அதிகரித்தது. உடல் முழுவதும் வியர் வைத்துளி நிறைந்தது. அவர் வெட்கமடைந்தவர் போல் என் கைகளை எடுத்து விலக்கினர். ஆனல், பாவம்! என்னுடைய உதவியில்லாமல் அவரால் ஓரடி கூட எடுத்து வைக்க முடியவில்லை. சிமிட்டுத் தரையில் விழுந் ததில் அவருடைய முழங்காலிலும் விலாவிலும் சரியான அடிபட்டிருந்தது. நான் அவரை மெதுவாக அணைத்த படியே உள்ளே அழைத்துக்கொண்டுபோய் படுக்க வைத் தேன். அவருடைய காயத்தை ஆற்றவேண்டிய சிச்ருஷை களை எல்லாம் நானே செய்தேன். இவைகளை எல்லாம் ஆபத்தோஷமாகத்தான் அவர் கருதியிருக்கவேண்டும். ஆனல் நான்..........அன்று இரவு காயத்தின் உபாதை யால் அவர் சரியாகத் தூங்கவில்லை. அப்பா — அம்மா என்று ஏதோ முனகிக்கொண்டிருந்தார். நானும் தூங்க வில்லை. ஹிருதயத்தை துளைக்கும் எண்ணத்தினல்..........

மறுநாளும் அப்படியே கழிந்தது – அதற்கு மறுநாள் அவர் எழுந்து நடமாட ஆரம்பித்துவிட்டார். மறுநாள் ஊருக்குப் போகப் போவதாக என்னிடம் சொன்னர் — அன்று அவர் தனக்கு வேண்டியவைகளை எல்லாம் தானே செய்துகொண்டார்.

அன்று இரவு - மணி ஒன்றிருக்கும். அன்று பகல் முழுவதும் என் மனம் தான் விரும்பும் காரியத்தை சாதிக்க தர்மத்தோடும், நீதியோடும் போராடி ஜெயித்தது – ஆம் என் மனம் தன் பசியை எப்படியாவது தீர்த்துக்கொள்ள சித்தமாய் இருந்தது.

அவர் — வெங்கட்ராவ் வாசற்பக்கத்து அறையில் படுத்து நிச்சிந்தையாகத் தூங்கிக் கொண்டிருந்தார் – இரு

டனைப்போல் அந்த அறையில் நுழைந்தேன். மெதுவாகப் போய் அவர் பக்கத்தில் உட்கார்ந்தேன். என் மனது எதையும் துணிவுடன் செய்ய நடுங்கியது. ஆம்; அந்த தர்மம் மறுபடியும் உணர்ச்சியுடன் போராட ஆரம் பித்து விட்டது. தண்டனை அடைந்தவன் கடைசிவரை யில் தன்னுடைய நியாயத்தை எடுத்துச் சொல்வதுபோல.

என்னுடைய கை தவறிப்போய் அவருடைய முழங் காலில் பட்டதால் அவர் திடுக்கிட்டு எழுந்தார்.

"யார்?"

நான் எழுந்து நின்றேன். அந்த இருட்டில் அவ ருக்கு என்னை தெரியவில்லை போலிருக்கிறது. மறுபடியும் அதட்டலான தோரணையில் "யாரது" என்றார்.

"நான் தான்" என் நெஞ்சிலிருந்து இவ்வார்த்தையை வெளியே இழுப்பது எவ்வளவு கடினமாய் இருந்தது தெரியுமா? அவர் சட்டென்று எழுந்து பொத்தானை அழுத்தி விளக்கை ஏற்றினார் — ஆனால் என்னை கண்டதும் அப்படியே பிரமித்து சிலைபோல் நின்று விட்டார். கையும் களவுமாகப் பிடிப்பட்ட கொலையாளியைப் போல் நின் றேன் நான். என் மூளை குழம்பியது—மூச்சே நின்றுவிடும் போலிருந்தது — உடல் முழுவதும் வியர்த்துக் கொட் டியது.

அவர் என் முகத்தை உற்று கவனித்து விட்டு ஏதோ புரிந்து கொண்டவர் போல் தலை குனிந்து பெருமூச்சு விட்டார். "ஏனம்மா இந்த நடுநிசியில்..........." என்று பாதி வார்த்தையை சொல்லி நிறுத்திக் கொண்டார். இந்த சோதனையான கேள்விக்கு என்னால் என்ன பதில் சொல்ல

2A
8-14

முடியும் ? விசாரணையின் முடிவில் குற்றத்தை மௌன மாக ஒப்புக்கொள்ளும் கைதியைப்போல் நின்றேன். சிறிது நேரம் அந்த அறையில் இடுகாடு போல் சூன்யம் சூழ்ந்திருந்தது. “நீங்கள் கொஞ்சம் அவருககுச் சொல் லக்கூடாதா ? அவருடைய அந்தரங்க சினேகிதராச்சே? இப்படி என்னைப்பற்றிக் கவனிக்காமல் இருக்கிறரே........? என்றேன்.

அவர் “ஹும்” என்ற முனகலுடன் – உன் மனது சரி யான நிலையிலில்லை அது எனக்குத் தெரியும் ஆனல் இந்த குழப்பம் உன்னுல் மாத்திரம் ஏற்பட்டதில்லை சூழ்நிலையை உணராமல் தவருன பாதையில் போவதால் ஏற்பட்டதே – ஹும்–போ—நீ போய் படுத்துக்கொள்–வாழ்க்கைப்பாதை வரண்ட பாலைவனமாயிருந்தாலும், பக்கத்தில் ஒரு நீரூற்று இருந்தால் தாகத்தைத் தணித்துக்கொள்ளக் கூடாது–தாகம் மரணத்தின் முடிவை எட்டினுலும் அது தான் தர்மம் – அப்படி இறப்பது தான் கடமை – நான் சொல்லவேண்டாம்–இதை உனக்கு உன்னுடைய குடும்ப சந்நியாசியே உபதேசித்திருப்பான்...........தர்மம்–உலகமே சூன்யமாய்ப் போனுலும் இந்த குருட்டு தர்மம் மாத்திரம் ஜீவித்திருக்க வேண்டும். இந்த வார்த்தைகளை சொல்லி விட்டு அவர் ஆழ்ந்த மௌனத்திலிருந்தார். அவர் என் னுடைய ஹிருதயத்தை அறிநதுகொண்டு விட்டார் – என் என்னுடைய கணவரின் நிலையையும் அறிந்துகொண்டு விட்டார். மனத்திரையில் மறைந்து நிற்கும் இந்த அந்தரங்க உணர்ச்சியை அவர் தெரிந்து கொண்டதில் எனக்கொரு ஆறுதல் – மனித ஸந்ததியில் ஸ்திரீயின் உள்ளத்தை அறிந்து அனுதாபப்பட ஒரு மனிதராவது இருக்கிறரல்லவா ?

நான் பிரேதம் நடந்து வருவதுபோல் என்னுடைய படுக்கையில் வந்து விழுந்தேன். என்னை அறியாமல் துக்கமும் வெட்கமும் என் நெஞ்சை வந்து அடைத்தது — உலகம் எனக்களித்த தார்மீகப் பாலைவனத்தில் தான் நான் தாபத்தோடு பிரயாணம் செய்யவேண்டும் என்பதை நினைக்க நினைக்க என் ஹிருதயம் சுருங்கி ஒய்ந்தது. அந்தப் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துப் பொருமிப் பெருமூச்சுவிட்டேன்.

இவ்வளவையும் படித்த பிறகு வெட்கத்தினல் நீ குன்றிப்போய் விடுவாய் — உன்மையில் வாயில்லா பூச்சி யாகப் பிறக்கலாம் — ஆனல் பெண்ணெனும் ஜென்ம மெடுக்க நாம் ஒரு பாபத்தையும் செய்யவேண்டாம்.

நீ கடைசியாக குறிப்பாக எழுதியிருக்கிருய்; நீ எனக்கு ஏதாவது உதவி செய்யக் காத்திப்பதாக — உன் னிடமிருந்து எந்த உதவியை நான் எதிர்பார்க்க? ஆனல், மனதை அடக்குவதற்கு ஏதாவது மருந்திருந்தால் அனுப்பு - மற்றபடி என் சௌக்யத்திற்கும் என் கணவர் சௌக்யத்திற்கும் எவ்வித குறைவுமில்லை.

உன் அன்புள்ள,
கோமதி.

# 5

# வெங்கட்ராவ்

திண்டுக்கல் 15—10—1948.

அன்பார்ந்த வேதராமனுக்கு நமஸ்காரம்.

நான் சென்ற வாரம் சொந்தக்காரியமாக ஈரோடு வந்திருந்தேன். நீ வெளியூர் சென்றிருந்தாய். உன் வீட்டில் தான் இரண்டு நாள் தங்கியிருந்தேன். ஆழ்ந்து யோசித்த பிறகு இந்த கடிதத்தை உனக்கு எழுத வேண்டியது என்னுடைய கடமையாகி விட்டது.

நீ படித்தவன் - சட்டக் கல்வியில் தேர்ந்து பிரசித்தமான வக்கீலாகி விட்டாய் தொழில் சம்பந்தப்பட்ட புத்தகங்களைப் படிப்பதைத் தவிற ஆத்மார்த்திகமான ஞானத்தை வளர்க்கக்கூடிய புத்தகங்களையும் ஏராளமாய் படித்துக்கொண்டு வருகிறாய் என்று எனக்கு நன்கு தெரியும். புத்தகங்கள் மனித வாழ்க்கையைச் சீர்த்திருத்துகிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். உன்னுடைய வாழ்க்கையில் இப்பொழுது எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் புத்தகங்களைப் படித்து அதன்படி நடப்பது அவ்வளவையும் நான் சரியென்று ஒப்புக்கொள்ளமாட்டேன். வாழ்க்கையில் அனுபவமடைய வேண்டியவைகள் எவ்வளவோ இருக்கின்றன ; ஞானோபதேசம் செய்வதோ, தத்துவம் பேசுவதோ மாத்திரம் போதாது. கடமையை உணர்ந்து

நடப்பது தான் முக்கியம் ; மனிதன் தனக்காக மாத்திரம் வாழவில்லை; பிறருக்காகவும் வாழவேண்டி இருக்கிறது.

ஆத்மஞானம், விரக்தி, கட்டுப்பாடு அனுஷ்டானம் இவைகளோடு மாத்திரம் வாழ்வது வாழ்வாகாது. நெஞ்சில் அன்பு; அனுதாபம். தேவேந்திரனின் பதவி கிடைப்பதாயினும் சுயநலமில்லாத நோக்கம்; தன்கடமை இன்னதென்று உணர்தல் இவைகள் தான் முதலில் மனிதனை மனிதனுக்குகிறது. இந்த மனிதத் தன்மையை முதலில் அடையாதவன் உலகத்தை திரஸ்கரித்துவிட்டு யோகியாகிவிட முடியாது. இந்த படிகளில் ஏறி அனுபவமடையாதவன் — இந்த வழிகளைப் பின்பற்றி பக்குவமடையாதவன் 'உலக பந்தத்திலிருந்து விடுபடுகிறேன்' என்று சொன்னுல் அவன் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிருன். அல்லது உலகத்தை ஏமாற்றப் பார்க்கிருன் என்று தான் நான் சொல்வேன்.

நான் அங்கு வந்திருந்தபோது உன் மனைவி 'நீங்கள் அவருடைய ஆப்த சினேகிதராச்சே. அவர் இப்படி என்னைப்பற்றிக் கவலையில்லாமல் இருக்கிருரே. நீங்கள் கொஞ்சம் சொல்லக்கூடாதா ?' என்று சொன்னுள். அவளைப் போன்ற ஒரு பெண் என்னைப்போன்ற ஒரு ஆண்பிள்ளையிடம் தன் இருதய அந்தரங்கத்திலுள்ளதை அப்படியே உடைத்துச் சொல்லிவிட முடியாது. ஆனுல் அதை நான் உணர்ந்து கொண்டேன். இந்த சமயத்தில் உன்னுடைய போக்கும் எனக்குத் தெரிந்தது தானே ?

நெடு நாட்களாக உன்னேடு பழகும் எனக்கு உன்னுடைய வாலிபப் பருவத்தின் விளையாட்டுகளெல்லாம் மறந்துவிடாது. இப்பொழுது வேண்டுமானுல் நீ பற்றற்ற

3

வன் போல் வாழ்வின் சுகத்திலிருந்து விலகி நிற்பவன் போல் இருக்கலாம். ஆனால் உனக்கு பெண்களின் அனுபவம் எவ்வளவு என்று எனக்குத் தெரியும். நீ அதிலெல்லாம் எவ்வளவு மோகமும் இச்சையும் வைத்திருந்தாய் என்று எனக்குத் தெரியும். அதனாலெல்லாம் உன் ஒழுக்கம்கெட்டு வாழ்க்கை சீர்குலைந்து விடுமோ என்று கூட நான் பயப்பட்டதுண்டு. எப்படியோ இந்த தீய பழக்கத்திடையே நீயும் ஒரு மனிதனாகி இன்று வேதாந்தம், தத்வம் எல்லாம்பேசி முற்றும் துறந்த முனிவனாகி விட்டவன் போல் நடக்கிறாய். ஆனால் நீ உன் கடமையை புறக்கணித்துவிட்டு அத்தகைய உயர்ந்த நிலையை அடைந்து விடமுடியாது. அப்படி நீ ஏதேனும் எண்ணினால் அது கனவு தான். அது நீ ஏதோ புத்தகம் படித்ததினால் ஏற்பட்ட மனோவியாதி என்று தான் நான் சொல்லுவேன்.

உனக்கொரு மனைவியுண்டு. அவளுக்காக நீ செய்ய வேண்டிய கடமையும் உண்டு. அவளைப்பற்றிச் சிந்தித்துப்பார்க்க சிறிதாவது உனக்கு அவகாசம் இருக்கும். அவளுக்காக உன் வாழ்க்கையில் நீ என்ன செய்திருக்கிறாய் என்று யோசித்து பார்க்காவிட்டால் நீ எத்தகைய ஞானத்தை அடைந்து எத்தகைய உயர்ந்த மார்க்கத்தில் நடந்தாலும் அதைக் கடமையை உணராமல் சுயநல நோக்கத்துடன் அடைந்ததாகத் தான் கருதமுடியும் — நீ வாலிபப் பருவத்தில் கல்யாணமாகி மனைவி வீட்டிற்கு வந்த பிறகும் கூடச் செய்த ஒழுங்கீனமான காரியங்கள் அவளைப் பொறுமையோடு இருக்கச் செய்திருக்கிறது. இன்னும் உனக்கு வயதாகவில்லை; அவளுக்கும் வயதாகி விடவில்லை; தொழில் துறையில் உனக்கு இன்னும் அலுப்பு ஏற்பட

O-, UNICEE, K
N53


வில்லே. தினமும் கோர்ட்டுக்குப் போகிருய்; சாப்பாட்டில் வெறுப்பேற்படவில்லே. நன்ருகச் சாப்பிடுகிருய்; ஆடம்பரமாக உடை உடுத்திக் கொள்கிருய் — இவைகளெல்லாவற்றையும் அனுபவிக்கும் போது மனேவியினுல் அடையகூடிய சுகத்தில் வெறுப்பு ஏற்படுவானேன். இதனுல் நீ முதல் படியிலேயே கால் வைக்காமல் முப்பதாவது படிக்குத் தாண்டிக் குதிக்க நினேக்கிருய் என்று தான் சொல்லவேண்டும். போகட்டும்! இன்னும் உனக்கு ஒரு குழந்தை கூட இல்லே. குழந்தை இல்லாததற்காக நீ வருத்தப்படாமல் இருக்கலாம். ஆனல் பெண்களின் இருதயம் அப்படி அல்ல — தாய்மை நிலேயை அடைய வேண்டும் என்று ஒவ்வொரு பெண்ணுக்கும் ஆவல் இருக்கும். பெண்கள் உலகத்தில் தாயான பிறகு தான் தங்கள் வாழ்வே நிறைவுற்றதாகக் கருதுகிருர்கள். உன் மனேவி ஒரு தாயாவதற்குத் தடையாக நீ இருந்தால் அந்த பாவம் எத்தகைய தவம் செய்தாலும் போகாது. நான் உனக்கு அதிகம் எழுதவேண்டாம். நீ விவேகி — நீ உன் மனேவியின் கையில் ஒரு குழந்தையைப் பார்த்த பிறகு–அவளே ஒரு தாயின் ஸ்தானத்திற்கு கொண்டுவந்து வைத்த பிறகு இந்த உலகத்தில் எல்லாவற்றையும் திரஸ்கரித்து விட்டு கண்மூடி நிஷ்டையில் அமர்ந்து விட்டால் கூட நான் சந்தோஷப்படுவேன். உன்னுடைய அன்பான பதில்.

அன்புள்ள,

**ஒய். வெங்கட்ராவ்.**

TAMIL ...
No. 111570

Sri Janardana Printing Works, Limited, Town High School Road, Kumbakonam.

# எமது அடுத்த வெளியீடுகள்

★

**ஜமீன்தாரின் ரகசியம்**

முகுந்தன்

**கொலையாளி யார்?**

எஸ். வி. கிருஷ்ணன்.

**கதை கேட்ட பேய்**

கி. ரா. கோபாலன்.

**ஏன்........?**

எம். வி. வெங்கட்ராம்.

**மது வனம்**

(விசுவப் பிரேமை—கவிதை)

சக்தி சரணன்

**கதையும் கடவுளும்**

'கோணல்'

ரோகிணிப்பிரசுரம்

80, மடத்துத் தெரு, ::: கும்பகோணம்.


Wrapper Printed by the Homoeopathy Press, Kumbakonam